Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889 ஆவணி ௨௩ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௭௨] வாரப்பானம்:- சார்வரி ௵ மார்கழி ௴ ௨௯ வெள்ளிக்கிழமை (13 January 1961) [இல-௩௪௧]

# தமிழ்இனத்தைப் பாதுகாத்துத்தாங்கும் பெரும்பொறுப்பு

—————:o:—————

## சைவ சபைகளிலேயே தங்கியிருக்கின்றது

———0———

### சைவபரிபாலன சபை ஆண்டுக் கூட்டத்தில் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களின் விண்ணப்பம்

———0———

**பள்ளிக்கூடங்கள் போய்விட்டன பழைய பண்பாட்டின் அடிப்படையில் நாவலர் வழி நடைபெற்றுவந்த கல்விமுறைக்குப் பதிலாக அரசினர் இட்ட சட்டத்தின்படி, புதுமுறை புகுத்தப் பட்டுவிட்டது. தமிழ்பேசும் மக்களின் உச்சந்தலையில் அடிபோல ஒன்றன்பின் ஒன்றாக மாற்றங்கள் நடைபெறுகின்றன.**

இந்தப் பேராபத்தான வேளையில் சைவ நெறிவழி நின்று தமிழுஞ் சைவமும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் தொண்டராகவுள்ள சைவப் பெரியார்கள் நிறுவிய சைவபரிபாலனசபை ஒன்றே வழிகாட்டவல்லது ஆகலின் இச்சபை ஆற்றிவரும் நற்றொண்டு பன்மடங்கு பயனளிக்கும் வண்ணம் சைவ மக்கள் ஊக்கம் கொடுக்க வேண்டியது அவசியம் என்று சபை உபதலைவர்களில் ஒருவரும் சைவப்பணியில் என்றும் ஈடுபடுகின்றவருமாகும் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் சபையின் ஆண்டுக் கூட்டத்தில் ஆண்டு அறிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி பேசும்பொழுது உணர்ச்சியுடன் உரைத்தனர்.

தேவார பாராயணத்துடன் சபையின் 72-வது ஆண்டுக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபைத்தலைவர் திரு த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களின் தலைமையிலே கூடியது.

தொடர்ந்து பேசும்பொழுது முதலியார் அவர்கள் இந்துசாதனம் ஆங்கிலம் தமிழ் வெளியீடுகளின் அளப்பருந் தொண்டுகளைப் பாராட்டி அவை சைவ மக்கள் அனைவராலும் ஆதரிக்கப் பெற வேண்டியது இந்நாட்களில் இன்றியமையாத சைவத் தொண்டாகும் என்றும் கூறினர்.

சபைக்குப் புதிய தலைவரைத் தெரிவு செய்யும் பொழுது முதலியார் முத்துத்தம்பி அவர்கள் மீண்டும் திரு. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களே தலைமை தாங்குதல் வேண்டுமென்றும், பிரித்தானிய நீதிமன்ற நியாயதுரந்தராகும் பதவியைப் பெற்றும் இந்நாட்டிற் சைவக்கல்வி முறைக்காக, சைவக் கல்லூரிகளின் அதிபராயும் சமயப்பணிச் சங்கங்களின் தலைவராகவும், சைவ நெறி கடைப்பிடிக்கின்ற தகைமை உடையவர் திரு. முத்துச்சாமிப்பிள்ளையென்றும் அவரின் பெயரை எடுத்துச் சொல்லினர். திரு. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் ஏகமனதாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றார்.

இறைவன் பணியை ஆற்றுவது கிடைத்தற்கரிய தொன்றென்றும், என்றும் சமயப்பணியும் சமய அடிப்படையிற் கல்வித்தொண்டும்புரிவதே தமது உள்ளத்தெழுகின்ற ஒரே ஒரு நோக்கம் என்றும், சைவ பரிபாலன சபையை நிறுவிய ஒப்பற்ற சைவத் தலைவர்கள் காட்டிய வழியிலும் ஸ்ரீலஸ்ரீ. நாவலர் அவர்களின் நன்னெறி முறையிலும் சபை மேலும் மேலும் விளங்கிவரப் பரமேசுவரன் பெருங் கருணையை வேண்டிச் சைவ மக்களின் ஆதரவைத் தருமாறு சபையைத் திரு. முத்துச்சாமிபபிள்ளை அவர்கள் கேட்டனர்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

## ... பொங்கலே வருக!

[தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ வ மு. இரத்தினேசுவரஐயர்]

துங்க மிக்க பங்கமில் தமிழர்
எங்கும் மகிழ இங்கித வாழ்வு
மங்கல மாகப் பொங்கலே வருக!
செந்தமிழ் நிலத்தை முந்தை நாளில்
அந்தமில் செல்வ விந்தை மேவ
நானில மாக நனிவளம் பெருக
நாட்ட முடைய பாட்டாளி ஆக்கும்
கோட்டமில் செந்நெல் ஈட்டிய கரும்பு
தங்கள் குலத்தினர் சங்கை மிளிரச்
சங்கரன் கணேசன் துங்கவேற் குமரன்
எங்கும் ஒளிதரு மெழின்மிகு பானு
என்ற தேவர் இன்பருள் நல்க
நன்றே போற்றி நலமிக வாழ்ந்தார்,
அதா அன்று:—
யாவரும் இனிய பாலின் சுவைமிகப்
பொற்புறு பொங்கலைப் புதுமுறை யாகத்
தையே! தழைக்குதி!! என்று வாழ்த்தி
செய்வன செய்து சிறப்புடன் வாழ்கவே.

## நலன்கள் பலபொலியும் பெருநாள்

——:0:——

## இறைவழிபாட்டுக்கு ஒப்பற்ற திருநாள்

### தமிழினம் ஒன்றுபட்டுக் கொண்டாட வேண்டிய தைப்பொங்கல்

தலை சிறந்த வழிபாட்டு நாளாகவும் பெரும் களியாட்ட விழாவாகவும் தமிழகத்தில் தைப் பொங்கல் இடம்பெற்று வருகின்றது. கால வேறுபாட்டால் மாரி வளம் பலவாறு வேறுபட்டு வருகின்றபோதும், பல்வேறு வகைப்பட்ட பயிர்கள், செடிகள், கொடிகள் மரங்கள் புத்துயிர்பெற்றுப் பொலிந்து பல நலன்களை மக்களுக்குக் கொடுக்க ஆரம்பிக்கும் காலம் இது. மாரிக் காலத்தில் பலவாறு வருந்தி நின்ற மக்களுக்கு இக்காலம் மகிழ்வளிக்கின்றது. கமக்காரர் தம் பயிர்களின் விளைவு கண்டு மகிழ்கின்றனர். இக் காரணங்களால் தை பிறக்க வழி பிறக்கும் என்ற பழமொழியும் உண்டாவதாயிற்று.

இவை எல்லாவற்றுக்கும் ஏதுவாயிருப்பது சூரியனே யாகலின் சிவசூரியனுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடுகள் செய்யப்படுகின்றன, ஆன் இனமே உழவருக்கு உறுதுணையாயிருந்து வருகின்றமையால் பட்டிப் பொங்கலும் செய்யப் பெறுவதாயிற்று. இவை ஒருபுறம்.

உயிர் உடற் சம்பந்தம் இந்நிலவுலகில் நிலைபெறுதற்கு சூரியனது உபகாரம் இன்றியமையாதுவேண்டப்படுகின்றது இரவு பகல், நாள் வாரம் மாதம் ஆண்டு என வரும் வேறுபாடுகள் கால அளவைகள் எல்லாம் சூரியனாலேயே உண்டாகின்றன. இவ் வேறுபாடுகள் உயிரின் அறிவிலுமே பலவேறுபாடுகளை உண்டாக்குந் தன்மையவாயுள்ளன. இவற்றுள் இரவு பகல் என்னும் இரு பிரிவுகளையுள்ள நாள் இருபத்துநான்கு மணித்தியாலங்களையுடையது. இவ்விருபத்துநான்கு மணித்தியாலங்களுள்ளும் அதிகாலையில் நாலுமணிக்கும் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரம் இந்நிலவுலக மக்கள் செய்யும் இறைவழிபாட்டுக்கு நனி சிறந்தநேரமாக விளங்குகின்றது. இந்நேரம் பிராமி முகூர்த்தமெனப்படும். இது இப்படியிருக்க பன்னிரண்டு மாசங்கள் உள்ள எங்கள் ஆண்டு ஒன்று தேவர்களுக்கு ஒரு நாளாகக் கருதப்படுகின்றது; ஆறு மாசம் இரவாக ஆறு மாசம் பகலாகின்றது. குறித்த (ஆறுமாச) இராக்காலம்முடிந்து (ஆறுமாச) பகற்காலமுண்டாதற்கு முன் உள்ள தேவர்களின் பிராமி முகூர்த்தமும் எங்கள் தைப்பொங்கல் நாளில் வரும் பிராமி முகூர்த்தமும் ஒரே காலத்தில் நிகழ, அக்காலம் எமக்கு இறைவழிபாட்டில் உரைக்கடங்காப் பெரும் பயனைத் தருவதாயமைகின்றது. இக் காரணத்தால் தலைசிறந்த வழிபாட்டு நாளாகத் தைப் பொங்கல் கருதப்படுகின்றது.

எனவே, இறை வழிபாடேயன்றி எங்கள் மீட்சிக்குப் பிறிது வழியில்லையென்று இரங்கி நிற்கும் தமிழினம், சாதி சமய வேறுபாட்டுச் சிந்தனைகளின்றி இறை வழிபாட்டுக்குச் சிறந்ததெனப் பண்டு தொட்டு அனுபவ வாயிலாய்க் கண்ட இந்நன்னாளிலே, "தனக்குவமையில்லாதான் றாள் சேர்ந்தார்க்கல்லான் -மனக்கவலை மாற்றலரிது" என்ற தெய்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

தைபிறக்கின்றது. வழிபிறக்கச் சைவநெறி தாங்குவதேவழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற் சிந்தனை

இளமை இன்பத்தில்
இச்சை வைத்திடில்
எழுமை யுந்துன்பம்
எய்தும் எய்துமே.

சூல பாணியைத்
துதிக்கும் அன்பரைக்
காலன் கண்டிடிற்
கலங்கி ஓடுமே.

(சிவ தொண்டன்)

---

### எங்கள் அறிவித்தல்

=0=

தை முதலாந்திகதி (14-1-61) சனிக்கிழமை தைப்பொங்கல் திருநாளாகலின் சைவப்பிரகாச யந்திரசாலையும், இந்துசாதனக் காரியாலயமும் அன்று மூடப்பட்டிருக்கு மென்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

—அதிபர்.

---

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சார்வரி ஞூ மார்கழி மீ
௨௰௨ வெள்ளிக்கிழமை

## பொங்கலோடு புத்துணர்ச்சி பெறுவோமாக

இயற்கையின் இயக்கத்துடன் இணைந்துள்ளதாகிய தைப்பொங்கற்பெருநாள் ஈழநாட்டிலுள்ளவர்களுக்கு இன்னல்களை வெல்லும் இதயத் திண்மையென்னும் புத்துணர்ச்சியை உண்டுபண்ணவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை நாம் இறைஞ்சுகின்றோம்.

தமிழக மக்கள் தாங்கொணு இடர்க்குள்ளாக்கப்பட்டுவிட்டனர். தன்னிட்ட ஆட்சி செய்யும் ஈழத்து அமைச்சர் அவை மூதறிஞர்மூதாதையர் முன் இட்ட அரசு முறையை, கல்வி கற்கும்கொள்கையை இன்ன பிறவற்றை சிங்களப் புத்த மதத்தவர்களுக்குச் சாதகமாகவும் ஏனையோருக்கு பாதகமாகவும் மாற்றி அமைப்பதைத் தமிழ் இனம் தாங்க முடியாத எல்லை வந்துவிட்டது. இடுக்கண் வந்தெய்தியக்காற் சைவ மக்கள் இறைவன் திருவருளை வேண்டியன்றி வேறெவ்வாறும் செயலாற்ற முடியாது. எனவே தைத் திருநாளில் நன்மை விளைவதற்காக நாம் அனைவரும் பரமேசுவரனை உள்ளத்தாலும் உரையாலும் உடம்பால் உஞற்றும் தொண்டுகளாலும் நினைந்து நினைந்து தோன்றாத் துணையே நற்றுணையாகும் என்ற நம்பிக்கையுடன் உறுதிகொள்வோமாக.

இந்நாட்டில் இருக்கின்றவர்கள் யாவரும் இலங்கை மக்கள் என்ற எண்ணத்தை மறந்து எண்கணக்கில் ஏற்றம் உள்ளவர்களே எல்லா உரிமைகளுக்கு முரியவர்கள் என்ற மறக்கொள்கையை அரசியலிற்புகுத்தி ஆணவத்தால் ஆட்சி செய்ய முனைந்திருக்கின்றவர்கள் நெஞ்சில் நீதி நெறி நினைவை இறைவன் உதிக்கச் செய்வாரென்று வழிபாடு செய்வோமாக.

எல்லா மக்களும் தங்கள் தங்கள் மதநெறிக்கிணங்க வாழ்வதே மனிதப்பண்பு என்று அறிஞர்கள் கூறுவர். அவ்வாறே சைவ மக்களும் தங்கள் சமய நெறியைக் கடைப்பிடித்துச் சான்றாண்மை சாலும் நன் மக்களாக வாழ்ந்து வருதல் வேண்டும். இந்த உண்மையை நாவலர் நற்றகையார் தமது வாழ்க்கைப் பணியாக எடுத்து உரைத்து சற்சங்கங்கள் கூட்டுவித்துத் தொண்டாற்ற வழிகாட்டினர். அவ்வழித்தோன்றிய சைவபரிபாலன சபை இவ்வருந் தொண்டை மேலும் மேலுஞ்செய்து சைவத்தையும் தமிழையும் உண்மை நெறியையும் நிலைநாட்ட உழைக்க உதவிபுரிவோமாக.

---

# பசு மேய்க்கும் பணி செய்த சிவயோகி

## திருமந்திரம் அருளிய திருமூலரின் வரலாற்றுச் சுருக்கம்

திருக்கயிலாயத்துச் சித்தராய் நந்திதேவர் திருவருளைப்பெற்ற சிவயோகி, தலயாத்திரையாகப் பொதிய மலையை நோக்கி வருகிறபோது, திருவாவடுதுறைக்கு வந்து வழிபட்டு அருகில் உள்ள சாத்தனூர் அடைந்தார்; அங்கு இறந்துகிடந்த பசு மேய்ப்பனுகிய மூலன் என்னும் இடையனின் உடலில் புகுந்து மூலராக அவர் எழுந்தார் என்பது வரலாற்றுச் சுருக்கம்; இப்படி மூலராக எழுந்தவுடன் எசமான் இறந்த துக்கத்தால் கதறிய பசுக்கள், ஆனந்த மேலீட்டால் மோந்தன, நக்கின, கனைத்தன, துள்ளிக் குதித்தன; இப்படி இப்படித் தங்கள் சந்தோஷத்தைப் பசுக்கள் காட்டின மூலராகிய சிவயோகியும் மகிழ்ச்சியோடு பசுக்களை மேய்த்தார். அவைகளைக் காவிரித்துறையிலே நீர் அருந்தச் செய்தார்; மாலை நேரம் வந்ததும் பசுக்கள் கன்றுகளை நினைத்துக் கொண்டு வீடுகளை நோக்கி நடந்தன. அவை தத்தம் வீடுகளை அடையும்வரை மூலரும் பின்தொடர்ந்து சென்றார்; இப்படி மூலர் அன்று மேற்கொண்ட பசுப்பணியும் முடிந்தது.

இப்படியாகப் பசுப்பணி முடிந்தபிறகுதான், திருவாவடுதுறையில் அரசமரத்தின் கீழ் 3000 ஆண்டுகள் யோகத்திலிருந்து, அருந்தமிழ் மூவாயிரம் அருளினர், திருமூலதேவநாயனர் என்று சிறப்பிக்கப்பெற்றார்; அந்த அருந்தமிழும் "திருமந்திரம்" என்ற பெயருடன் திகழ்கின்றது.

திருஞானசம்பந்தர் இத்திருவாவடுதுறையிலுள்ள ஸ்ரீ. கோமுத்தீஸ்வரர் கோயிலுக்குள் வந்தவுடன் இங்கு தமிழ்மணம் கமழ்கின்றது என்று கூறி, கொடிமரத்து அடியில் தோண்டச்செய்தார். அப்போது திருமூலரின் திருமந்திரமாலைச்சுவடி அகப்பட்டது என்று திருவாவடுதுறைத்தல புராணத்தில் காணப்படுகின்றது.

திருமாளிகைத்தேவர், திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மருள் முதல்வராவர், இவர் இத்தலத்தில்தான் போகநாத சித்தருடைய அருள்பெற்றார்; சித்தர்கள் பலர் இந்தத் தலத்தில் வாசஞ் செய்கின்றனர் என்ற நம்பிக்கை மக்களிடையே இன்றும் இருந்து வருகின்றது. இத்திருவாவடுதுறையில் "நவகோடி சித்தர்கள்" வசித்துத் தவங்கிடந்த காரணத்தால் "நவகோடிசித்தர்" புரம் என்ற பெயரும் இதற்கு உள்ளது.

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ. குருமகாசந்நிதானம் அவர்கள் தமிழ்மணம் கமழும் திருமந்திரம் உலகம் முழுதும் பரவி மக்கள் அதன்பயனை அடைய வேண்டும் என்ற பெருங் கருணையோடு சென்ற 7 ஆண்டுகளாகத் திருமந்திர மகாநாட்டைச் சிறப்பான முறையில் நடத்திக் கொண்டுவந்து புலவர்பெருமக்களை திருமந்திரத்தினிடம் புகும்படி செய்து திருமந்திரத்தைச் சிறு சிறு பகுதிகளாக வெளியிடுகின்றனர்.

செய்து மக்களுக்கு இலவசமாகவே வழங்கிக்கொண்டு வருகின்றார்கள்.

தைப்பொங்கல் அன்று முதல் 3 நாள் 8-வது திருமந்திர மகாநாடு நடைபெறப்போகின்றது.

(திரு. மா.பா. தினமணிநிருபர்)

---

## இந்தியாவில் வெளிநாட்டு ஒற்றர்கள்

—0—

வெளிநாட்டு ஒற்றர்கள் இந்தியாவில் பெருகுகின்றனரெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தூதுவர்களின் நிலையங்களே இவர்களின் நிலைக்களன்களென்றும் தேசத் துரோகத்துக்கு ஆயத்தமான இந்திய ஐந்தாம் படையினர் அவர்களுக்கு உதவியாயுள்ளனரென்றும் மேலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த எண்மர் இத்தொடர்பில் விசாரணை செய்யப்படுகின்றனர். வெளிநாட்டுத் தூதர்களின் நிலையங்களென்று பொதுப்படையாகக் குறிப்பிடப்பட்டபோதும் உருசிய தூதுவர் நிலையம் குறிப்பிடப்படத்தக்கதாய் வந்துள்ளதென்று இப்பொழுது அறியவருகின்றது.

---

## எண்ணெய்ச் சட்டத்திற்கு ஆங்கில அமெரிக்க எதிர்ப்பு

எண்ணெய்ச் சமாசங்களின் நிலங்கள் கட்டிடங்கள் முதலியவற்றை எடுக்கும் சட்டத்தையும் இலங்கை அரசாங்கம் உருசியாவிடமிருந்து எண்ணெய் வாங்கும் ஒழுங்கையும் எதிர்த்து ஆங்கில அமெரிக்க அரசாங்கங்கள் இலங்கை அரசாங்கத்துக்குக் கருத்துத் தெரிவித்துள்ளன.

—

### தமிழரசுக்கட்சியின் எதிர்ப்பு இயக்கம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களம் ஆட்சி மொழியாக உபயோகிக்கப் படும்போதும் இம்மாகாணப் பாடசாலைகளில் சிங்களம் படிப்பிக்கத் தொடங்கும்போதும் தங்கள் எதிர்ப்பியக்கத்தைத் தொடங்குவதாகத் தமிழரசுக்கட்சியார் தீர்மானித்துள்ளனரென அறியவருகின்றது.

---

# யாழ், நகரசபைமுதல்வர் தெரிவுச் சூழ்நிலை


—:0:—

## திரு. தெ, ச, துரைராசாவுக்குப் பெரும்பான்மை ஆதரவு

—0—

### சீர்திருத்த வேலைக்கு ஓர் அறிகுறி

—:0:—



வட்டாரத் தேர்தல் முடிந்ததும ஒவ்வொரு நகரபிதாவும் யாழ் நகர சபை முதல்வராகப்பட்டபாடு கொஞ்சமல்ல.

ஆனல் அடிப்படையில் ஒரு அநுபவம் வாய்ந்த தகுதியுள்ளவரை முதல்வர் ஆக்கவேண்டும் என்ற உணர்ச்சி இடையிடையே ஊடுருவிக் கொண்டு நின்றது அதிலும் பார்க்கத் தகுதியில்லாதவர்களையும் அரசியற் சூழ்ச்சிகளுக்கு ஆதரவு தேடுகின்றவர்களையும் தடுப்பது மிகவும் முக்கியமானதென்ற எண்ணம் பரவிவந்தது இதன் பயனுகவே முதல்வர் தெரிவு நன்கு முடிவுற்றது.

முன்னுள் முதல்வரும் வட்டாரத் தேர்தலிலே தோல்வியடைந்தவரும் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரும் ஆகும் திரு. அ. த. துரையப்பாவின் ஆதரவாளர்கள் 'தனிப்பட்டோர்' வகையில் நின்று ஒரு குழுவினராக முயன்று முதல்வர் தெரிவில் எதிர்க்கட்சியாக எழுந்தனர். இப்பொழுது முதல்வராகத் தெரிவு செய்யப்பெற்றவரையே தெரிவு செய்தல் வேண்டுமென்ற முன்னணிச் சாரரில் ஒருவர் காத்திராப்பிரகாரமாகக் கப்புமாறிப் பாய்ந்து 'தனிப்பட்டோர்' குழுவுக்கு ஆதரவு கொடுத்து அவர்களுக்கு நான்கு வாக்குகள் அடையச் செய்தனர். என்றாலும் [illegible] வெற்றிபெற்றனர்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

---

இந்துசாதன வாசகர்களுக்கு

## ஒரு செந்தமிழ் விருந்து

"தங்கத் தாத்தா" நவாலியூர் சோமசுந்தரப் புலவரவர்களைப்பற்றிச் சிறூர் முதல் பண்டிதரீருக யாவருமறிவர். புலவரவர்கள் ஆக்கிய "ஆடிப்பிறப்பு", "கத்தரி வெருளிப்பாட்டு" ஆதியவை சிறுவர் உள்ளங்களில் என்றும் நிலவும் தன்மை வாய்ந்தன. "உயிரிளங் குமரன் நாடகம்", "நாமகள் புகழ்மாலை", "கதிரைச் சிலேடைவெண்பா" முதலியவை பண்டிதர்களை மகிழ்வூட்டுந் தன்மைவாய்ந்தன. புலவர் அவர்கள் யாழ்ப்பாண நாட்டிலுள்ள எத்தனையோ கோயில்களில் எழுந்தருளியிருக்கும் சிவன் கணபதி முருகன் வயிரவர் ஆதியாம் மூர்த்திகளைப் போற்றி ஊஞ்சல்களும் பதிகங்களும் பாடியுள்ளார்கள். அன்னவற்றுள் அச்சுவாசன மேறாதவை பல உண்டு.

அவற்றுட் சில, இந்துசாதன நேயர்களுக்கு ஒரு செந்தமிழ் விருந்தாகத் தொடர்ந்து வெளியிட ஒழுங்குசெய்துள்ளோம். முதலாவது விருந்து புலவர் அவர்களின் பிறப்பிடமாகிய நவாலி வடக்கிலுள்ள "அட்டகிரிக் கந்தசுவாமி பேரில் பாடிய "அட்டகிரிக் கலம்பகம்" என்னும் நூலாகும். இது அடுத்த இதழில் ஆரம்பமாகும். [ப—ர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நிருவாகசபையின்

# 1959—60-ம் ஆண்டு அறிக்கை

திருச்சிற்றம்பலம்

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

திருச்சிற்றம்பலம்

**கூட்டங்கள்:** இவ்வருடத்தில் வருடாந்தக் கூட்டமும் ஒரு விசேட பகிரங்கக்கூட்டமும் 10 நிருவாகசபைக் கூட்டங்களும் நடைபெற்றன.

அங்கத்துவம்: சென்ற ஆண்டு முடிவில் 200 அங்கத்தவர் இருந்தார்கள். இவ்வருடத்தில் 15 அங்கத்தவர்கள் சேர்ந்தார்கள். வருடமுடிவில் 215 அங்கத்தவர்கள் உண்டு.

சமயப் பிரசாரம்: வழக்கம்போல் சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் நடைபெறும் சமயகுரவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சேக்கிழார் ஆகியோரின் குருபூசைத் தினங்கள் விசேட மகேசுரபூசையோடும் ஏனைய நாயன்மார்களது குருபூசைத்தினங்கள் விசேடபூசையோடு மாத்திரம் கொண்டாடப்பெற்றன மேலும் திருவிளையாடற் புராணம், திருவெம்பாவை நாட்களில் திருவாதவூரடிகள் புராணம், மகாசிவராத்திரியன்று கந்தபுராண அடிமுடி தேடுபடலம் ஆகியன படனம் செய்யப்பட்டன. சரசுவதி பூசை, திருவள்ளுவர்தினம், சிவகுருநாதர் சிவபதமெய்திய தினம் ஆகியனவும் கொண்டாடப்பெற்றன. வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் திருவெம்பாவைக் காலத்தில் சபையின் ஆதரவில் திருவாதவூரடிகள் புராணபடனம் நடைபெற்றது.

மேற்படி வைபவங்களுக்கும் ஏனைய சமயத் தொண்டுகளுக்கும் மனமுவந்து பணவுதவி யளித்த சைவச் சீலர்களுக்குச் சபையின் நன்றி யுரித்தாகுக. இவைகள் யாவற்றையும் நடாத்தி வருகின்ற சபையின் சமயப்பிரசார அமைச்சர் அவர்களின் உழைப்பு பாராட்டற்குரியது.

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் சைவசமயக் கைதிகளுக்கு ஞாயிறு வாரந்தோறும் சைவசமய வழிபாடும போதனையும் சபையாரால் திரு. பொ. அப்புக்குட்டி அவர்கள்மூலம் நடாத்தப்பெற்று வருகின்றன. வருடப்பிறப்பன்று சைவக் கைதிகளுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

**சைவமகாநாடு**

சார்வரி வருடம் சித்திரைத் திங்களில் மூன்று நாட்கள் சபையாரால் ஒரு சைவமகாநாடு நடத்தப்பட்டது. இந்தியாவிலிருந்து கலைமகள் ஆசிரியர் திரு. கி. வ. ஜெகந்நாதன் அவர்களும் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு K. வச்சிரவேலு முதலியார் அவர்களும் வந்து மகாநாட்டில் தலைமை வகித்தும் சொற்பொழிவாற்றியும் பங்குபற்றினர்கள். இவ்வூர்ச் சைவ அறிஞர்களும் சொற்பொழிவாற்றி மகாநாட்டைச் சிறப்பித்தனர். இவர்களுக்கும் மகாநாட்டுச் செலவுக்குப் பணம் பொருள் உதவிய சைவப் பெரு மக்களுக்கும் சபையின் நன்றி உரித்தாகுக.

**பொது**

சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் ஒருவாசிகசாலையும் நூல்நிலையமும் திறப்பதற்கு, வேண்டிய முயற்சிகள் எடுக்கச் சபை தீர்மானித்திருக்கின்றது. கோயிலாக்கண்டிச் சிவன்கோயிற் புனருத்தாரணவேலை ஆரம்பமாகியிருக்கின்றது. கூடிய விரைவில் இக்கோயில் கும்பாபிஷேகம் பூர்த்தியாகச் சைவப் பெருமக்களின் பணவுதவி கோரப்படுகின்றது.

சென்ற யூலை மாதப் பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பெரும்பான்மைப் பிரதிநிதித்துவம் பெற்றதும் தமிழுக்கும் சைவசமயத்துக்கும் இதுகாலவரை நிகழ்ந்திராத பெரியஇடர் எதிர்நோக்கியிருக்கிறதென்ற சைவமக்களின் பயத்துக்கேற்ப மதபாடசாலைகள் யாவையும் அரசாங்கம் எடுப்பதற்குச் சட்டம் கொண்டு வருவதாகத் தெரிந்ததும் சபையின் அதிகாரசபை ஒரு விசேட கூட்டத்தில் பாடசாலைகளை அரசாங்க மயமாக்குவதை வன்மையாகக் கண்டித்து அரசாங்கத்துக்கும் பாராளுமன்ற அங்கத்தவர் யாவருக்கும் சபையின் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. பின் சபையின் ஆதரவில் ஒரு பகிரங்கக் கூட்டமும் கூட்டிச் சபையின் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. எல்லா மதத்தவர்களாலும் நடாத்தப்பட்ட பகிரங்கக்கூட்டத்திலும் சபையின் அங்கத்தவர்கள் தங்கள் மறுப்பைத் தெரிவித்தனர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)


## தொழில் நுட்பக் கலாசாலை
(SCHOOL OF TECHNOLOGY)
"சிற்றுடெல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

எங்கள் நாட்டின் பொருளாதார விருத்திக்கும், கல்விகற்றும் தொழிலின்றித் தவிக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்டவும், தமக்கும் தம் தாய் நாட்டுக்கும் பயனுள்ள வகையில் அவர்களைப் பயிற்றவும் இக்கலாசாலை பணி செய்கின்றது. தமிழ்ச் சமுதாயத்தை எதிர் நோக்கி நிற்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டின் இளைஞர்களின் நோக்குப் புதிய திசையில் திரும்பவேண்டும்,

### தொழில் நுட்பக் கலையே எதிர்காலத்தில் ஈடேற்றம் தரவல்லது

1. மின்சார சாதனை அமைப்பு வேலை
2. தன்னியக்கிகளின் பொறியியல் கல்வி
3. வானொலிக் கருவிகளைப் பேணும் முறைகள்
4. மின்சார பொறியியலில் சாதனைப் பயிற்சி
5. பொறியியல் சம்பந்தமான வரைதல்
6, அளத்தல் படம்போடுதல் மட்டமாக்குதல் முதலிய உலாந்தாக்கல்வி
7. கட்டட அமைப்பு, திட்டப்படங்கள் வரைதல் முதலியன.

இன்னோரன்ன கலைப்பயிற்சி இக்கலாசாலையில் பெறலாம். பயிற்சித்திட்டங்களை விளக்கும் சூசனப்பிரதிகள், கலாசாலையிற் சேரவேண்டிய விண்ணப்பப்பத்திரங்கள், கலாசாலைக் காரியாலயத்திற் பெற்றுக்கொள்ளலாம்,

கலாசாலை அதிகாரி.


## அறம் செழிக்கச் செய்யும் ஒரு பொங்கல்

### தமிழர் வாழ்வுக்கு அறிகுறியாயமைவது

தீந் தமிழ் பேசும் நல்லுலகம் எங்கும் புதுமை வளர அறம் செழிக்க உழவர் திருவிழா ஆண்டுக்கொருமுறை தை மாசம் முதலாம் திகதியில் பொங்கலுடன் நடைபெறுகின்றது. அத் தினம் தமிழர்கள் தமிழர்களாக வாழ்வார்களா அன்றேல் வீழ்ச்சியுறுவார்களா என்ற நிலைமையை பொங்கல்மூலம் எடுத்துக் காட்டும்.

"அன்பும் பொங்குக
அருளும் பொங்குக
இன்பப் பாலே
எங்கும் பொங்குக
பொங்கலோ பொங்கல்"

என்றுற் போன்று பொங்கலானது தமிழகம் செழிக்கத் தமிழ்த்தாய் வாழ நன்றாய்ப் பொங்க வேண்டும்.

அப் புனித நன்னாளிலே ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் சூரியபகவானுக்குப் பொங்கிப் படைத்து உற்றார் உறவினர் எல்லோரையும் அழைத்து இன்முகம் காட்டி பொங்கற்பிரசாதத்தைஉண்டு மகிழ்வர் அன்று இரவு பட்டிப் பொங்கலும் பொங்கப்படும்,

அடுத்தாற்போல் கன்னிப் பொங்கல் என்ற பொங்கலும் பொங்கப்படும். இப் பொங்கல் இலங்கைத் தமிழ் நாட்டில் இல்லாதிருந்தாலும் இந்தியத் தமிழ் நாட்டிலே வழக்கத்தில் இருந்து வருகின்றது.

இத் திருப் பொங்கல் கன்னிப் பெண்களால் ஆற்றோரங்களிலோ, குளக் கரைகளிலோ பொங்கிப் படைக்கப்படும். அப்புனித நேரத்திலே கன்னியர் கூடிக் களிநடம் புரிவார்கள். இப்புனித விழாவைக் காண ஆடவர்களும் ஆவலாய்ச் செல்வார்கள். இப் புனிதமான பொங்கலுக்குக் கன்னிப்பொங்கல்என்று பெயர்.

'அன்பும் பொங்குக
அருளும் பொங்குக
இன்பப் பாலே
எங்கும் பொங்குக
பொங்கலோ பொங்கல்'

திரு. இ. நா. தியாகராசா,
சாவகச்சேரி.

### இங்கே நெருப்பு அங்கே குண்டு

நயினாதீவு நாகபூஷணி அம்மன்கோயிற் கோபுரத்துக்கு முன் உள்ள யானைக்கால் மண்டபம் சென்ற சனிக்கிழமை இரவு தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. இங்கே ஒரு தொகுதி கடற்படையினர் வசிக்கின்றனர் என்பது இத்தொடர்பிற் குறிப்பிடப்படுகின்றது.

இது இப்படியிருக்க, கொழும்பு புறக்கோட்டை மலிபன் வீதியிலுள்ள யாழ்ப்பாணத்தாரின் உணவுச்சாலையுள் அதே இரவு குண்டு ஒன்று வீசப்பட்டு நாலுபேர் காயமடைந்துள்ளனர்.

### சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதருக்கு உருத்திராக்ஷமகா கண்டிகை

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகா சந்நிதானம அவர்கள் ஜன்ம நட்சத்திர அஸ்தத்தன்று 5 ஸ்தலங்கள் (திருவலஞ்சுழி, சுவாமிமலை, குடந்தை, திருவிடை மருதூர், திருப்புவனம்)தரிசனம்செய்துஅழகான முறையில் தயாரிக்கப் பட்டுள்ள உருத்திராக்ஷமகரகண்டிகையும் பொன்னுடையும் சாற்றுபடியும் செய்துகொண்டார்கள்.

(திரு. மா. பா, தினமணிநிருபர்)

### நட்ட ஈட்டுடன் ஓய்வு

அரசாங்க ஊழியர் சங்கங்கள் 72 கொழும்பில் கூடி "செப்ரெம்பர்" 1956-க்கு முன் அரசாங்க சேவையிற் சேர்ந்த ஊழியர்கள் நட்ட ஈட்டுடன் ஓய்வுபெற வசதி கொடுக்கப்பட வேண்டுமென்றும் அவ்வசதி 1967-ம் ஆண்டு 'ஜனவரி' வரையும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கேட்டு நிற்கின்றனர்.

### தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம்

மொழிப்பிணக்குக் காரணமாய் அரசாங்க ஊழியர் சங்கத்திலிருந்து பிரிந்து நிறுவப்பெற்ற தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தில் மேன்மேலும் புதிய அங்கத்தவர்கள் சேர்ந்து வருகின்றார்களென்றும், திருக்கோணமலை மன்னார் முதலிய இடங்களிற் கிளைச் சங்கங்கள் உருவாக்கும் செயல்கள் நடைபெறுகின்றன என்றும் அறிய வருகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ... ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது பாடசாலைகள் அரசாங்கத்தால் எடுக்கப் பட்டு விட்டன. வருங்காலத்தில் சைவசமய உரிமைகளைப் பாதுகாப்பது சபையின் முக்கிய கடனுகின்றது. இம் முயற்சியில் சைவமக்கள் யாவரும் ஒன்றுபட்டுச் சபையை ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். மேலும் தன் வாழ்நாள் முழுவதும் சமயத்துக்காகவே உழைத்து வரும் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுக்குச் சைவமக்களால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் சபை பங்குபற்றி அன்னருக்கு உபசாரப்பா படித்தும் பொன்னுடை போர்த்தியும் அவர்களைக் கௌரவித்தது.

அரசாங்கத்தால் 3 மாத காலத்துக்குமேல் வாசகால 'விசா' வழங்கப்பட்டவர்களுக்கு ரூபா 400/- வரியாக விதிக்கப்பட்டது. இச் சட்டத்தை எதிர்த்துச் சபை வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

**புண்ணியநாச்சி தருமம்:**

மறவன்புலோவில் தோப்புப் பிள்ளையார் கோவில் நித்திய பூசையும், மணவாளக்கோல விழாவும், சிதம்பரத்தில் மாதந்தோறும் கட்டளையும், திருவாதிரையன்று ஸ்ரீநடேசப் பெருமானுக்கு அபிஷேகத்துக்கு ரூபா. 50/ வழங்குதலும், சங்கானைச் சிவன் கோயிலுக்கு வருடந்தோறும் ரூ 60/- கொடுத்தலும் நடைபெற்று வருகின்றன. புண்ணியநாச்சி தரும வயல்களின் வருவாயைப் பெருக்கவும் மேலும் அனேக சமயத் தொண்டுகளைச் செய்யவுஞ் சபை தீர்மானித்திருக்கின்றது.

**சபையின் வெளியீடுகளும், பிரசுரங்களும்:**

சபையின் பத்திரிகைகளுக்குச் சந்தாதரர்களைச் சேர்ப்பதற்கு ஒரு செயற்குழு தெரிவுசெய்யப் பட்டிருக்கின்றது. பாடசாலைகள் அரசாங்க மயமாக்கப்பட்ட இந்நேரத்தில் சைவமக்கள் ஒன்றுபட்டுத் தங்கள் சமய உரிமைகளைப் பேணுவதற்குச் சபையின் பத்திரிகைகள் இன்றியமையாதனவா யிருக்கின்றன. இவைகளை வெளியிடுதலில் பணநஷ்டம் ஏற்படாமற் செய்வது சைவ மக்களின் பெரிய கடனுகும்.

நூல்கள் வெளியிடுதலில் போட்டி அதிகமுள்ள இக் காலத்தில் சைவ வித்தியாசாலைகள் சபையின் நூல்களையே வாங்கிச் சபைக்கு உதவிசெய்வது சைவமக்களின் கடனுகும். எமது பாஷை சமய உரிமைகள் பறிபோகின்ற நிலைமையில் நாமிருக்கின்ருேம். நாம் விழிப்போடு இருக்கத்தவறின் வருங்காலச் சைவமக்கள் எங்களையே தூற்றுவார்கள். சைவமக்கள் யாவரையும் சபையில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து சபையை ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்ருேம்.

ஆக்கவேலை: சென்ற ஆண்டறிக்கையிற் குறிப்பிட்டபடி சைவமக்களுக்கு ஒரு சர்வகலாசாலை அவசியம் என இவ்வாண்டும் கூறவேண்டி யிருக்கின்றது.

இராமநாதன் கல்லூரியையும் பரமேஸ்வரக் கல்லூரியையும் கலாசாரச் சர்வகலாசாலைகளாக்கும் முயற்சிகள் எடுக்கப் படுகின்றன. அம் முயற்சிகளில் சபை தன்னுலான பங்கைச் செய்யுமெனச் சைவமக்களுக்கு உறுதி கூறுகின்றது.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

ஆ. தனபாலசிங்கம்,
கௌரவ காரியதரிசி,

ஆனைப்பந்தி,
3-1-61.

# பல சமயப் பொருள்களையும் தன்னகத்தே கொண்டது சைவம்

### சித்தாந்தசமாச மங்கையர் மகாநாட்டில் பண்டிதை திருமதி பாலாம்பிகை தனபாலசிங்கம் திறப்புரை

சைவ சித்தாந்தமானது எல்லாச் சமயப் பொருள்களையும் தன்னகத்தேயடக்கி ஒரு விதமான பிணக்குமின்றி உண்மைப் பொருளைக் கூறி நிற்பது.

"ஓதுசம யங்கள்பொரு ளுணரு
நூல்கள்
ஒன்ருேடொன் ருெவ்வாம
லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல்
யாதிங் கென்னி
லிதுவாகு மதுவல்ல
வெனும்பிணக்க தின்றி
நீதியினு லிவையெல்லா
மோரிடத்தே காண
நிற்பதுயா தொருசமய
மதுசமயம் பொருணூ
லாதலினு லிவையெல்லா
மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு
மரனடிக்கீ ழடங்கும்"

சமயங்களும், அந்தச் சமய சாஸ்திரங்களும், அந்தச்சாஸ்திரங்களிலே சொல்லப்படும் பொருளும் ஒன்ருேடொன்று ஒற்றுமையின்றிப் பல திறத்தனவாக விருக்கும். இவைகளுள் மேலான சமயம் யாது, சாத்திரம் யாது என்று ஆராயுமிடத்து, இது நல்லது, அது தீயது என்கின்ற பிணக்கு ஒன்றும் இல்லாமல், நீதி முறையினுல் எல்லாப் பொருள்களையும் தன்னகத்தே யடக்கி நிற்கும் சமயம் சைவ சித்தாந்தமேயாகும்.

இது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளின் இலக்கணங்களைக் கூறுவது பதி - முதல்வன்; சிவபெருமான். அவருடைய இலக்கணங்களை எடுத்துக் கூறுதல் பிகையாகும். பசு - ஆன்மா, இது அநாதியாகவே மல சம்பந்தமுடையது. பாசம்-மலம். இது ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். ஆன்மாக்கள் ஆணவ மலத்தினுற் கட்டுண்டு தம்வயமிழந்து அகங்காரம், பொருமை முதலிய தூர்க்குணங்களுக்கு அடிமைப்பட்டு பல இழிதொழிலைச் செய்யும்.

இத்தீயகுணங்களும், செயல்களும் பாமரரிடையேயன்றிப் பல பெரியோர்களிடத்தும் காணப்பட்டன; காணப்படுகின்றன. முன்பு சகலாகம பண்டிதரென்னும் பேராசிரியர் ஒருவர் இருந்தார். அவர் வேத சிவாகமங்களைக் கற்றுணர்ந்த மேதாவி. இவரிடம் கல்வி பயிலும் மாணவரோ அநேகர். இவ்வாறு இவர் சற்குரு நிலையை யடைந்து பெருமையோடு வாழுங்கால் சைவ சித்தாந்த வாரிதியாகிய மெய்கண்ட தேவரின் புகழ் இவருடைய செவிக்கெட்டியது. இவருடைய மாணக்கரு மிதையறிந்தனர். அவர்களுக்குத் தேவரைக் காணவேண்டுமென்ற அவா உண்டாயிற்று. தமதாசிரியரிடம் விடைபெற்றுக் கொண்டு திருவெண்ணெய் நல்லூரை யடைந்தார்கள். ஆசிரியர் சிறிதுகாலம் பார்த்தார். மாணக்கர் திரும்பி வந்தபாடில்லை. அவருக்குக் கோபம் மேலிட்டது. எவ்வாருயினும் நான் அங்கு சென்று அவரை அடக்குதல் வேண்டும் என்று சென்ருர். அங்கு கண்ட காட்சி கண்கொள்ளாததாகவிருந்தது.

தேவர், தாய் தந்தையர் நெடுங்காலந் தவமிருந்து அரிதிற் பெற்ற தவப்புதல்வர், சிவஞானச்செல்வரென்பதையும், ஐந்தாவது வயதிலே பேரறிவு முற்றப்பெற்றவரென்பதையும், பரஞ்சோதி மாமுனிவரிடம் சிவதீக்ஷை பெற்றவரென்பதையும் பண்டிதர் அறிந்தாரில்லை. அவர் இப்போது கண்டது யாதெனில், தாரகை நடுவண் தண்மதி போல ஆயிரக்கணக்கான சீடர்கள் மத்தியில் பதி பசு பாச விலக்கணங்களை விளக்கிக் காட்டிக் கொண்டிருந்தலையே. அதனுலே பண்டிதர்க்குப் பொருமை பிடர் பிடித்துந்தியது. அகங்காரப் வாளாவிருக்க விடவில்லை. யானே பிராமணன், இவரோ வேளாளன். என்னிலும் பார்க்க இவர் வருணத்திலும், வயதிலும் குறைந்தவர். எவ்வாற்ருனும் இவரை அவமானப்படுத்துதல் வேண்டுமென்று நினைந்து மதிப்பில்லாமல் அவர் முன்னிலையிற் சென்று தேவரை நோக்கி, ஆணவமல சொரூபத்தைத் தரிசித்தல் எப்படி என்று வினவினுர். பிள்ளையாருக்கு விஷயம் விளங்கிவிட்டது கழிவிரக்கம் கொண்டார் "இறைவனே! எவ்வளவு நூல்களைக்கற்று அதிதீவிர பக்குவத்தையடைந்த இப்பெரியாரிடத்தும் ஆணவமல சேட்டை சிறிதிருக்கின்றது" என நினைந்து, பண்டிதரை முடிமுதலடிவரைநோக்கினுர். அவருக்கு நயனதீட்சை ஆகிவிட்டது. மெய்ஞ்ஞானம் உண்டாயது. தான் தேவரை, ஆணவமல சொரூபத்தைக் காண்பது எப்படி என்ற கேள்வியே ஆணவமுனைப்பினுல் எழுந்ததென்பதை நன்கறிந்தார். செய்த தவறையுணர்ந்து மிகவும் வருந்தினுர். தேவர் முன்னிலையில் மரம் போல வீழ்ந்து, "என்னை வாழ்விக்க வந்த குருவே, நான் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என இரந்தார். தேவர் அவர் மேலிரக்கமுற்று அவரைத் தம்முடைய சீடனுக ஏற்று மெய்ப்பொருளை உபதேசித்துச் சிவஞானசித்தியாரென்னும் அரிய நூலை இயற்றி உலகிற்கீய வேண்டுமென்று கட்டளையிட்டார்.

பேரறிவு கைவரப்பெற்ற பண்டிதரை ஆணவம் எவ்வாறு ஆட்டிவைத்தது என்பதை அறியுங்கள். இத்தகைய வலிமைபொருந்திய மலம் எங்களைச் சும்மாவிடப் போவதில்லை. ஆதலால் எம்முடைய நிலைக்கேற்றவாறு நல்வினையைச் செய்து அம் மலபந்தத்தினின்றும் விடுதலையடைய முயற்சித்தல் வேண்டும்.

## உயிர் வாழ்க்கை

### பூமியில் மாத்திரம் உளதா ?

இப்பூமியைப் போன்ற கிரகங்கள்எண்ணிறந்தவையுள்ளன. அவற்றில் உயிர் வாழ்தல் முடியுமென்ற கருத்தும் நிலவுகின்றது. ஆனுல் இச்சூரியமண்டலத்தில் பூமியொழிந்த ஏனைய கிரகங்களில் உயிர்கள் வாழவில்லை என்று ஹார்வாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற வான சாஸ்திரி ஒருவர் கருத்து வெளியிட்டுளளார்.

# தமிழினத்துக்குத் தனிப் பெருமை ஈட்டிய பெரியார்

### சேர். பொன் அருணுசலமவர்கள் நினைவு

அரசியல் அறிவுத் துறையில் அரிச்சுவடி தானும் அறியாதார் பலர், கல்வித்துறையில் பெருமை விளங்காதார்பலர், வாழ்ந்த காலம். அத்தகைய காலத்தில் கல்விக் கடலின்பெருந்துறை கண்டு, உச்சியிலிருக்கும் அரசாங்க உத்தியோகம் வகித்து ஒப்பிலாப் புகழ்மாலைகள்பெற்று ஆன்ம ஞானமும் உடையராய் ஒருவர் அன்று இருந்தாரென்ருல்அவர், உத்தமர் சேர். பொன். இராமநாதன் அவர்களின் சகோதரன் சேர். பொன். அருணுசலமவர்களேயாவர்.

எக்கலைபற்றியும் அதிகம் ஊக்கம் உண்டாகாதகாலத்திலேயே பல்கலைக் கழக இயக்கத்தையுண்டாக்கி, அரசியற் சுதந்திரப்பேற்று முயற்சியிலும் முன்னுக்கு நின்ருர் சேர். பொன். அருணுசலமவர்கள். ஒழுக்கத்திற் சிறந்து ஓர் ஆத்ம ஞானியாயும் அவர் துலங்கினுர். தமிழினத்துக்குப் பல்லாற்ருனும் பெருமையுண்டாக்கி, திருவருட்சிறப்பையும் மறவாது வாழ்ந்த அவருடைய நினைவு நாள் சென்ற திங்கட்கிழமையாகும். அவரை நினைவு கூர்ந்து அவருடைய அடிச்சுவட்டில் நாம் நடக்க முடியுமானுல் உய்தி எங்கள் முன்னுக்கு வரும்.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம் சாமி
**தங்க பஸ்பம்**
உபயோகியுங்கள்.

தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம், இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.

**தாளக பஸ்பம்** ஈளை, இளைப்பு, தொய்வு, இருமல், கடின சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.

24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S I.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் தங்கள் பழைய நிலையை அடைவதற்கு வழி

## நாவலர் காட்டிய நன்னெறியைக் கடைப்பிடித்து இராமநாதவள்ளலின் இலட்சியத்தைநோக்கி இயங்குவதே

[சைவப்பேரறிஞர் திரு. சு நடேசபிள்ளை அவர்கள் சித்தாந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தபொழுது ஆற்றிய அறிவுரை ]

**சைவம் வளரத் தமிழ் வளரும். இலங்கையிற் சைவ சமூகத்தின் இரு கண்களாகத்தோன்றிய ஆறுமுக நாவலரும் இராமநாத வள்ளலும் சைவத்தையுந் தமிழையும் ஒருங்கே வளர்த்தார்கள். அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றினுல், அவர்கள் காலத்தில் தமிழ் மக்கள் இலங்கையிற் பெற்றிருந்த உச்சநிலையை மீண்டும் அடைவது திண்ணம்.**

இறைவன் கோலத்தைப் புறக்கண்கொண்டு பார்த்து, புறக் கரணங்களால் வழிபட்டு, அகக்கரணங்களின் தூய்மை பெறுவது நாம் கொள்ளத்தக்க முதற்சாதனமாகும். இந்நிலையில் நாம் நின்று இறைவனைக்குறிக்கும் தோத்திரங்களையுஞ் சாத்திரங்களையும் ஓதியுணர்கின்றபோது நமது இதயம் நெகிழ்ந்து, உள்ளத்திலே தெளிவுபெறும் பக்குவத்தை அடைகின்றேம். ஆன்மா பதி புண்ணியத்திற் புகும் நிலை இதுவாகும். பொதுவாக எல்லாச் சமயங்களும் பரோபகாரத்தை அடிப்படையாகக் கொண்ட பசு புண்ணியத்தை வற்புறுத்துவன. பசு புண்ணியத்தோடு பதி புண்ணியமும் ஆன்ம ஈடேற்றத்துக்கு அவசியம் என்பது சைவாகமங்களின் சிறப்புக் கொள்கையாகும். சைவகுலத்திற் பிறந்தும் பலர் இவ்வுண்மை அறியாது பதி புண்ணியமாகிய சரியை கிரியாதி மார்க்கங்களைப் புறக்கணித்துத் தாம் பெற்ற பிறவிப்பயனை வீணாக இழக்கின்றனர். பதிபுண்ணியத்துறையிற் சைவ மக்களை வசீகரித்து ஈடுபடுத்துவதே சைவ சித்தாந்த சமாஜம் போன்ற இயக்கங்களின் மூக்கிய நோக்கமாகும். இதனாலன்றே சைவத் திருமுறைகளையும், சைவசாத்திரங்களையும் சைவமக்கள் எளிதிற் பெறக்கூடிய அடக்க விலைப் பதிப்பாக வெளியிடும் கடமையை நம் சமாஜம் மேற்கொள்வதாயிற்று; மகா நாடுகளைக் கூட்டிச் சைவ அறிஞர்களைக்கொண்டு சமய உண்மைகளை விரிவுரைகள் வாயிலாகத் தெளியப்படுத்துகின்றது; பிரார்த்தனைக் கூட்டங்களை ஆங்காங்கு நடத்துகின்றது; 'சித்தாந்தம்' என்ற பத்திரிகைவாயிலாகச் சைவப் பிரசாரஞ் செய்கின்றது. இத்தொண்டை மேலும் மேலும் விரிவாகவுந் தீவிரமாகவுஞ் செய்யவேண்டுமென்று சமா

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

**யாழ். நகரசபை முதல்வர்....**
2-ம் பககத் தொடர்ச்சி

முதல்வர் பதவிக்குத் திரு. தெ. ச. துரைராசா அவர்கள் பெயரைப் பிரேரித்தவர், வைத்தியகலாநிதி எஸ். ஏ. தர்மலிங்கம், அநுவதித்தவர் காதி. எம். எம். சுல்தான்.
மேலதிக ஆதரவு கொடுத்தவர்கள்: திருவாளர்கள்: பி எஸ். சோமசுந்தரம், பி. எம். ஜோன், எஸ் ஜே. அழகையா, ஏ. நடராசா, காதி எம். எம். சுல்தான், வைத்தியகலாநிதி. எஸ். ஏ. தர்மலிங்கம், நா. த. செல்லத்துரை

காதி. வி எம். எம். அபூசாலி அவர்களின் பெயரை பிரேரித்தவர் திரு. கே.எஸ். நடராசா. அநுவதித்தவர் திரு. ஏ. ஜி. இராசசூரியர், மேலதிக ஆதரவுகொடுத்தவர்கள் திருவாளர்கள்: ஏ. ஜி.இராசசூரியர், மத்தியூஸ் ஜேக்கப்,கே எஸ்.நடராசா.

வாக்களிப்பில் திரு. எஸ்

### தேர்த்திருவிழா

'ஈழத்துச் சிதம்பரம்' என அழைக்கப்படும் காரைநகர் திண்ணபுரம் சிவாலயத்தில் மாககழித திருவெம்பா விழாவையொட்டித் தேர்த் திருவிழா 1 - 1 - 61 ஞாயிற்றுக்கிழமை மிகச்சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலும், தீவுப்பகுதியிலும் இருந்து வந்து ஆயிரக்கணக்கான அடியார்கள் வழிபாடு செய்தனர். நடேசர் ஆருத்திரா அபிஷேகம் அடுத்த நாள் அதிகாலையில் மிகச் சிறப்பாக சிதம்பரத்தில் நடப்பது போல் நடைபெற்றது. அபிஷேக தரிசனஞ் செய்யப் பெருந்தொகையான அடியார்கள் கோவில் மண்டபத்தில் குழுமியிருந்தனர். காரைநகர் மணிவாசக சபையினர் ஆலயத்தின் அண்மையிலுள்ள மணிவாசகர் மடாலயத்தில் ஒவ்வொருநாளும் திருவிழாக் காலத்தில் அன்னதானம் செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். ——

இராசரத்தினம்செட்டியார் கலந்துகொள்ளவில்லை.

சமசமாசக்கட்சி அங்கத்தவர்கள் இருவரும் வாக்களிக்கவில்லை.

### தமிழினத்தைப் பாதுகாத்து தாங்கும் பெருப் பொறுப்பு

1-ம் பக்கத்தொடர்ச்சி

சென்ற வருடாந்தக் கூட்ட வரலாறு, செயலாளரின் அறிக்கை, தனதிகாரியின் வரவு செலவுக் கணக்குகள் சமயப்பிரசார அமைச்சரவர்களின் வரவு செலவுக் கணக்குகள் ஆகியன அங்கீகரிக்கப்பட்ட பின் உத்தியோகத்தர் தேர்தல் நடைபெற்றது.

தலைவர் திரு. தி. முத்துச் சாமிப்பிள்ளை அவர்கள்.

உபதலைவர்கள்: திரு. சு. சிவசுப்பிரமணியம்,முதலியார் திரு. செ. முத்துத்தம்பி அவர்கள்.

செயலாளர் திரு. ஆ. தனபாலசிங்கம் அவர்கள்.

உதவிச் செயலாளர் திரு. சு. பரநிருபசிங்கம் அவர்கள்.

தனதிகாரி முகாந்திரம் இ.பொ.இராசையா அவர்கள்

சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

கணக்குப்பரிசோதகர் திரு. வி. சண்முகம்.

C. பிரிவு நிருவாக சபை அங்கத்தவர்களுந் தெரிவு செய்யப்பட்டனர்.

1957, 58, 59 ம் ஆண்டு சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சைவ சமய பாடத்தில் முதலாவதாகச்சித்தியடைந்த மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பின்வரும் பிரேரணைகள் பின்பு நிறைவேற்றப்பட்டன.

1. சபையின் சிதம்பர புண்ணிய நாச்சி மடத்தில் பாதுகாப்பாளராக இருப்பவர் அங்கு செல்லும் யாத்திரிகர்கள் தங்குவதற்குத் தடையாயிருத்தலால் அவரை மடத்திலிருந்து வெளியேற்ற உடன் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கின்றது,

2. ஷை மடத்துக்கு உடனடியாகச் செய்யவேண்டிய திருத்தங்களைச் சபை மேற்கொள்ள வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கின்றது.

3. இந்தியாவிலுள்ள புண்ணிய ஷேத்திரங்களில் யாத்திரிகர்கள் வருடந்தோறும் செய்யும் நேர்த்திக் கடன்கள் முதலியனவற்றிற்கு வேண்டிய பணத்தை இந்தியாவுக்கு அனுப்பவோ அல்லது கொண்டுசெல்லவோ, இலங்கைச் செலாவணிக் கட்டுப்பாட்டு அதிபர் (Controller of Exchange) உத்தரவு அளிக்கவேண்டுமென்றும் இச்சபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

4. இலங்கையிலுள்ள சைவக் கல்லூரிகளினதும் சைவப் பாடசாலைகளினதும் தலைவர்களையும் அப்பாடசாலைகளில் சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் சபையில் அங்கத்தவர்களாக்கி சபைப் பத்திரிகைகளையும் பிரசுரங்களையும் இப்பாடசாலைகளில் உபயோகிக்கும்வண்ணம் ஆவன செய்யவேண்டுமென்ற இச்சபை தீர்மானித்திருக்கின்றது.

5. அடுத்துவரும் சித்திரைத் திங்கள் 1ந் தேதி தொடக்கம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையும் சைவப்பிரகாச யந்திரசாலையும் கருமங்கள் அனைத்தையும் தமிழிலேயே நடத்துவதென இச்சபை தீர்மானிக்கின்றது.

# சைவவீறுபெற்று இளைஞர்கள் விளங்குதல் வேண்டும்

**சைவசித்தாந்த சமாச இளைஞர் மாநாட்டில் திரு சு. பரநிருபசிங்கம், B. Sc. (Dip-in-Ed,) அவர்களின் வரவேற்புரை**

இன்று சைவத் தமிழகத்தில் எழுச்சிபெற்று வரும் தெய்வ நம்பிக்கையற்ற புரட்சிக் கொள்கைகளால் அள்ளுப்பட்டுச் செல்லாத சைவ வீறுபெற்றவர்களாகச் சைவ இளைஞர்கள் விளங்குதல் வேண்டும்.

"ஆனை மாமலை யாதி யாயவி
டங்களிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்குளளியேன லேன்திரு
ஆல வாயரன் நிற்கவே"

எனத் திருஞான சம்பந்தப் பெருமான் "ஈனர்களாகிய சமணர்கள் இயற்றுகின்ற அல்லல்களுக்கு அஞ்சேன், திரு ஆலவாயான் எனக்குத் துணையாக நிற்பான்" என்னும் பொருளமைய இளமையுடன் கூறுகின்ற ஆற்றல் சைவ இளைஞர்கள் உள்ளத்தில் இடம்பெறல் வேண்டும்.

பொன்னையும், பொருளையும், போகத்தையும் பெரிதாக மதித்து, சமய நூல்களிலும், சமய ஆசாரங்களிலும் பற்றில்லாமல் அவற்றை இகழ்ந்து பிறவிப் பயனைப் பாழாக்குகின்ற நிலைமை சைவ இளைஞர்கள் உலகிலிருந்து நீங்க வேண்டும். கட்டுத்தளராத இளமையும், உலகப்பற்றுத்தோயாத தூய பளிங்குபோன்ற உள்ளமும் படைத்த இளைஞர்கள் சைவப்பணியில் ஈடுபட்டுச் செயலாற்றுவார்களானுல் உலகமெலாஞ் சைவசித்தாந்த நெறியின் பேரொளி பரவி விளங்குமென்பதில் ஐயமில்லை.

'நிலவுந் திருநீற்று
நெறித்துறை நீடுவாழ
உலகெங்கும் நிரம்பிய
சைவம் உயர்ந்துமன்ன"

எனச் சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் உலகம் ஒன்றுபட்டுக் கிடக்கின்ற இந்த 20-ம் நூற்றாண்டில் உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்து மன்ன வேண்டுமென்றுல், அதற்குச் செயலாற்றக் கூடியவர்கள் இளைஞர்களே யாவர்கள். இளைஞர்கள் ஒவ்வொருவரும் திருஞானசம்பந்தப்பெருமான் போல அல்லல்களுக்கு அஞ்சாமல் ஆத்மீகத் துடிப்பு வாய்ந்தவர்களாய்ச் சைவத் தொண்டு ஆற்றவேண்டிய நெருக்கடி இன்றுதான் சைவத் தமிழகத்தில் நிலை பெற்றிருக்கின்றது. இன்று வனிடத்திலே இடைவிடாத

# தெய்வப் பணியாற்றிய

## சைவப் பெரியார்களை நினைவுகூருவோம்

[சைவ சித்தாந்த மங்கையர் மாநாட்டில் **திருமதி. மகேஸ்வரி ஸ்ரீகாந்தா** அவர்களின் வரவேற்புரை.]

இந்த நேரத்தில் சைவத்துக்கும், தமிழுக்கும் அளப்பரிய சேவை செய்த இரு பெரியார்களைப் பற்றி நினைவு கூராமலிருக்க முடியாது. அவர்கள் செந்தமிழ்ச் செல்வராகிய ஆறுமுகநாவலரும், சிறந்த அரசியல் ஞானியும் வள்ளலுமாகிய சேர். பொன்னம்பலம் இராமநாதனுமாவர். ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலரின் புகழ் ஈழத்தில் மட்டுமன்று இந்தியாவிலும் பரவியிருப்பது யாவருமறிந்ததே. வள்ளலென யாவராலும் போற்றப்படும் சேர். பொன்.இராமநாதன், சைவப் பெண் பிள்ளைகள் சைவச் சூழ்நிலையிற் கல்வி பயில வேண்டுமென்பதை உணர்ந்து பெணகளுக்கெனச் சைவக் கல்லூரி ஒன்றைத் தமது சொந்தப்பணத்தைக்கொண்டு நிறுவியிருக்கிறுர்கள். ஈழத்தில் பெண்பிள்ளைகளுக்கென நிறுவப்பட்ட முதற் சைவக் கல்லூரி இராமநாதன் கல்லூரியே. சமயத்தையும் மொழியையும் பேணி வளர்க்கும் பொறுப்புப் பெண்களுடையதாகும். குழந்தைகளை வளர்க்கும் பொறுப்புந் தாய்மார்களுக்கே. தாய்மார்களிடம் சமயப்பற்றும் மொழிப்பற்றும் இல்லாவிட்டாற் பிள்ளைகளிடம் அப்பற்றைக் காண்பரிது. "இளமையிற் கல்" என்ற ஆன்றேர் வாக்கியத்தைக் கடைப்பிடித்துப் பிள்ளைகளைக் குழந்தைப்பிராயத்திலேயே சன்மார்க்க வழியில் நடக்கப் பழக்க வேண்டும்.

சைவப்பெண்கள் இதை உணர்ந்து தங்கள் கடமையிற் றவருது பணியாற்றல் வேண்டும். முற்காலத்திற் சைவ நெறியினின்று வழுவாது சமயத்தைப் பேணி வளர்த்த பெருமையையுடைய மங்கையர்க்கரசியார், திலகவதியார் போன்றவர்களின் வாழ்க்கை எமக்கோர் எடுத்துக்காட்டாகும். இக்காலத்திலும் யாழ்ப்பாணத்தில், சுன்னுகம் செல்லாச்சியம்மையார், நல்லூரைச் சேர்ந்த சடையம்மையார் ஆகியவர்கள் சிறந்த ஆத்மஞானிகளாக விளங்கியிருக்கிறுர்கள். ஆழ்ந்த தெய்வ பக்தியுடைய செல்லாச்சியம்மையாரைத் தரிசிப்பதற்குப் பலர் செல்வது வழக்கம். 'சுன்னுகத்தம்மா' என்றுல் செல்லாச்சியம்மையாரையே குறிக்கும். சடையம்மையாரவர்கள், சிவனடியார்களாகிய யாத்திரீகர்களின் வசதிக்காகக் கதிர்காம க்ஷேத்திரத்திலும், திருச்செந்தூரிலும், நல்லூரிலும், கீரிமலையிலும் மடங்கள் ஸ்தாபித்திருக்கிறுர்.

அன்புள்ளவர்களாய்த் திருவருள் வழிநின்று,

"ஞால நின்புக ழேமிக
வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம்
மாதியே"

எனத் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரத் தொடர்களை ஓதியவண்ணம் சைவ இளைஞர்கள் சைவப்பணியில் ஈடுபடும் தெய்வ உள்ளத்தை நல்கும்வண்ணம் திருக்கேதீச்சரப் பெருமானின் திருவடிகளை வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 15-1-61—21-1-61

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

காணிப்பொருள்கள்மூலம் இலாபங்கள் இந்த வாரம் நிச்சயம், உத்தியோக சித்திக்கும் புகழுக்கும் இடமுண்டு. உம்முடைய முயற்சிகளில் மூத்த சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பார்கள்,

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

ஞாயிறு திங்கள் கவனமாய்க் கழிக்கவேண்டும். வார மிகுதி வியாபாரக்கருமங்களுக்கு நல்லாயிருக்கும். சிறிது காலத்துக்கு ஆராய்வில்லாது விரைந்து தீர்மானிக்க வேண்டாம்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

முதல் இருநாட்களும் புதுக் கருமங்களுக்கு நல்லாயிருககும் செவ்வாய் புதன் கவனமாய்க் கழிக்க வேண்டும். வியாபாரக் கருமங்களுக்கு வார மிகுதி நல்லாயிருக்கும. ஆனால் தேகசுகம்பற்றி எச்சரிகையாயிருக்கவும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

புதுக்கருமங்களுக்கு மூன் அரைவாரம் நல்லாயிருக்கும், பகைவர் அழிவும் புகழும் நிச்சயம். ஆனால் புதன் இரவு வியாழம் வெள்ளி கவனமாய்க்கழிக்க வேண்டும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்பக்கருமங்கள் இந்தவாரம் குழப்பமாயிருக்கும். அவமானங்களுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. ஆனால் பகைவர் அழிவுக்கிடமுண்டு. வாரத்தின் கடைசி நாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்த வாரம்சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு பெண் இனத்தவர்கள்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். செலவும் அதிகரிக்கும் ஆனால் நண்பர் அளவுகடந்து உதவியாயிருப்பார்கள்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாப் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

கமத்தொழில் முயற்சிகளில் இலாபங்கள் நிச்சயம். இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர்கள் உதவுவார்கள். ஆனால் கருமங்களைத் தீர்மானிப்பதில் நீர் வருத்தப்படுவீர். உணர்ச்சிக் குழப்பங்களுக்கிடமுண்டு.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணத்துறையில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் நல்ல பலனைத்தரும். நண்பர் அதிக உதவியாயிருப்பார்கள், சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

நீர் விரும்புகிறபடி கருமங்களைக் கையாள முடியாது இந்த வாரம் வருத்தப்படுவீர். குடும்பக்குழப்பங்களுக்கும் இடமுண்டு. பிதாவழி இனததவர் சண்டைதொடுத்து நிற்பார்கள். ஆனால் எதிரில் நல்லகாலம்

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

இந்த வாரம் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு, அநேக எதிர்ப்புகள் கண்டனங்களை நீர் முன்னிடவேண்டிவரும். ஆனால் எப்படியும் கருமங்களை நீர் விரும்புகிறபடி கையாளக்கூடியதாயிருக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பணத்துறையில் நல்ல வாரம். புகழும் சமூக சித்தியும் நிச்சயம். ஆனால் குடும்பக்கருமங்கள் குழப்பமயிருககும். சிறு சுகவீனங்களுக்கும் இடமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. உம்முடைய கருமங்கள் குழப்பமாயிருக்கும். செலவதிகரிக்கும். ஆனால் அதிகம் துன்பப்பட வேண்டாம். ஏனென்றால் உமக்கு விரைவில் நல்லகாலம் நிச்சயம்.

## அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் வண் - தென்- மேற்கில் ஐக்கிய லாப நிதியின் அலுவலகத்தில் சிருப்பர் சு.கனகசபை அவர்களிடம் 1-1-1956ந் திகதி தொடக்கம் 31-12-1958ந் திகதி வரை வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 1961 ஆூ ஜனவரிமீ 26ந் திகதி (26-1-1961) வியாழக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி அலுவலகத்தில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. சே. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவுகாரரும்,
கொமிசனரும்விலைமதிப்பாளரும்.
2-1-1961.

M 171 6, 13-1-61

சங்கானை
அரசடி வயிரவர் கோவில்

## தேர்த்திருப்பணி விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

சங்காவனை அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்களை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றேம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,
பொ. அப்பாத்துரைஐயர்.
அரசடி வயிரவர்கோவில்,
சங்கானை,
F 191 19-9-60.

## நலன்கள் பலபொலி

(முதற்பக்கத் தொடர்ச்சி)

வத்திருவாக்கைச் சிந்தையிற்கொண்டு, பொங்கிப் படைத்தும், பிறவாறும் தத்தமக்கியைந்த வகையில் மன மொழி மெய்களால் இறைவனை வழிபட்டு எமக்கு அருள்புரியுமாறு வேண்டி நிற்றல் இன்று எம்மவர் ஒவ்வொருவருக்கும் இயல்பாய் அவசியம் அமைய வேண்டியதாகின்றது.

## தருமபுரம் ஆதீனம் குருமூர்த்திகள் குருபூசை விழா

சிதம்பரம். ஜனவரி 5

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25-வது தருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஆதீனத்தின் ?-வது மூர்த்திகளான ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசதேசிக ஞானசம்பந்தப் பரமாசாரிய சுவாமிகளின் குருபூசை விழாவை நேற்று சிறந்த முறையில் நடத்தி வைத்தார்கள்,

காலையில் ஸ்ரீலஸ்ரீ. கயிலை குருமகா சந்நிதானம் அவர்கள் திருமுறைப் பாராயணங்களுடனும் நாதசுர வாத்திய முழக்கங்களுடனும் பெரும் திட்டத்தில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடத்தி ஆதீன அடியவர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கினுர்கள்.

பகலில் மகேஸ்வர பூசையும், ஏழைகளுக்க அன்ன தானங்களும் செய்து வைத்தார்கள்.

"சைவாநுட்டான அகவல்" "சிவபூசையகவல்" ஆகியவை குருபூசை நினைவு மலர்களாய் வெளியீடு செய்யப்பட்டன.

அன்று காலை முதல் மாலை வரையில் பேராசிரியர்கள் சாத்திர - தோத்திர சொற்பொழிவுகள் செய்தனர்.

(திரு. மா. பா. தினமணி நிருபர்)

## ஸ்ரீ ஆத்மநாதப்பெருமாள் கோயிலில் ஆருத்திரா தரிசன விழா

சிதம்பரம், ஜனவரி. 2.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள், ஆதீனத்திற்குச் சொந்தமாகவும், ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளுப்தேசம் பெற்றுள்ள ஸ்தலமாகவுமுள்ள ஆளுடையார் கோயில் என்கிற திருப்பெருந்துறை ஸ்ரீ சிவயோகநாயகி சமேத ஸ்ரீ ஆத்மநாதப்பெருமான்கோயிலில் ஸ்ரீமாணிக்கவாசகர் மார்கழி ஆருத்ராதரிசன மகோற்சவம் 23-12-60 அன்று தொடக்கம் செய்து வைத்து விழாக்களைத் தினமும் காலை, மாலை சிறப்புடன் நடத்திவைத்தார்கள். 31-12-60 மாலை திருவாசகக் காட்சியும் இரவு வெள்ளி இரதக்காட்சியும் நடைபெற்றன. 1-1-61 இரவு 3-12 மணிக்குமேல் 3-36-க்குள் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிக்குச் செய்தருளிய உபதேசக் காட்சியும் நடைபெற்றது.

விழா நாட்களில் திருவாதவூர்ப் புராணப் பிரசங்கமும் நடைபெற்றது.

(திரு. மா. பா. தினமணி நிருபர்)

## புதிய கல்விச்சட்டம்

—O—

பாராளுமன்றம் 18-1-61ல் கூடப்பட்டுப் புதிய கல்விச் சட்டத் திருத்தம ஆராயப் படும். தனித்தியங்க விரும் [illegible] பின்பு ஆராயப் படும்.

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

Std 14

# தமிழ் மக்கள் தங்கள்

5-ம் பக்கத் தொடர்ச்சி

ஐச் செயலாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்,

சைவ சமயத்துக்குத் திருநெறி என்ற பெயர் தேவாரத்தில் வழங்கப்பட்டிருக்கின்றது. இப்பெயருக்கு ஏற்ப, சைவசமயத்தில் அழகுண்டு, மங்களமுண்டு; ஆன்மாவைப் பரசவப்படுத்தும் பக்திப் பாடல்கள் உண்டு; செவிகளுக்கு அமுதூட்டும் இன்னிசைப் பண்கள் உண்டு; கண்களைக்கவரும் கலைக்கருவூலங்கள் உண்டு; அழகொழுகும் அற்புதத் திருவுருவங்கள் உண்டு. வேற்றுத்தேயத்தினரையுஞ் சமயத்தினரையும் வசீகரிக்கும் இயல்புடைய தாய் நம் சமயப் இக்காலத்தில் விளங்குகிறது. இந்த அருந்தனத்தை நம் சைவ இளைஞர்கள் இழந்து புன்மை நெறியிற் செல்லாது, அவர்களைப் பாதுகாக்கும் கடமை சமாஜப்போன்ற தாபனங்களுக்கு இக்காலத்தில் ஏற்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சைவ சித்தாந்த சாத்திர உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் இக்காலத்தில் தததுவ ஆராய்ச்சியாளர்களிடையே தோன்றிப் பரவிவருகின்றது அமெரிக்காவில் சிக்காகோ நகரத்திலுள்ள பல்கலைக்கழகத்திற் சமயத்துறைப் பகுதித் தலைவராயிருக்கிற அறிஞர் சென்ற ஆண்டில் என்னைக்கண்டு சைவ சித்தாந்த ஆராய்ச்சிக்கு அப்பல்கலைக் கழகத்தினர் இடம வகுத்துள்ளார்களென்று கூறினர். சைவ சித்தாந்த சாத்திரங்கள் உணர்த்தும் உண்மைகள் நுணுக்கமான ஆராய்ச்சிக்கு உரியவை; பாநுபவத்தைத் தரும் பெற்றி வாய்ந்தவை. தமிழிலும் வடமொழியிலுமுள்ள சைவ சித்தாந்த சாத்திரங்களை விளக்கி ஆங்கிலம் போன்ற உலக மொழிகளில் நூல்களை வெளிப்படுத்துவது இக்காலத்தில் அவசியஞ் செய்யவேண்டிய பணியாகும்.

இலங்கையில் இத்தகைய துறைகளிற் பணியாற்றுவதற்கு ஓர் அரிய வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக்கூடியதாக இருப்பதை இம்மகாநாட்டில் தெரிவிக்க விரும்புகிறேன். இலங்கை சுவாதீனமடைந்த பிறகு இலங்கை அரசாங்கம் பௌத்த சமயத்தின் அபிவிருத்தியில் அதிக ஆர்வங் காட்டிவருகின்றது. சென்ற ஆண்டில் இரண்டு பௌத்த பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்காக ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டுமென்றும், யாழ்ப்பாணத்தில் இராமநாத வள்ளல் நிறுவிய பரமேசுவரக்கல்லூரியும் இராமநாதன் கல்லூரியும் இருக்கும் இடங்களை இப்பல்கலைக் கழகத்துக்கு உபயோகிக்கலாமென்றும் நான் இலங்கைப் பிரதமருக்குச் சமர்ப்பித்த விண்ணப்பத்தை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். இப்பல்கலைக் கழகம் சைவத்துக்குந் தமிழுக்குமுரிய வித்தியா பீடமாக விளங்குமென்று எதிர்பார்க்கிறேம். இப்பல்கலைக் கழகம் விரைவில் உருவாகவேண்டுமென்று இறைவனை அவன் திருவருள் பாலிக்கும் இச்சந்நிதானத்திற் பிரார்த்திப்போமாக.

சைவம்வாழ்க. தமிழ்வாழ்க.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 13-1-1961 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org